## பெப்ரவரி – 08 – வியாழன்

**புனித ஜெறோம் எமிலியானி**

**நீதிநெறி காப்போர் பேறு பெற்றோர்! திபா. 106:3**

### முதல் வாசகம் : 1 அரசர் 11 : 4 – 13

சாலமோன் முதுமை அடைந்தபோது, அவருடைய மனைவியர் அவர் இதயத்தை வேற்றுத் தெய்வங்களைப் பின்பற்றும்படி மாற்றிவிட்டனர். அதனால் அவர் உள்ளம் தம் தந்தை தாவீதின் உள்ளத்தைப் போல் கடவுளாகிய ஆண்டவருக்கு முற்றிலும் பணிந்திருக்கவில்லை.சாலமோன் சீதோனியரின் தேவதையான அஸ்தரேத்தையுதம் அம்மோனியரின் அருவருப்பான மில்க்கோவையும் வழிபடலானார்.இவ்வாறு சாலமோன், ஆண்டவர் பார்வையில் தீயதெனப் பட்டதைச் செய்தார். தம் தந்தை தாவீது ஆண்டவரை முழுமையாகப் பின்பற்றியது போன்று அவர் செய்யவில்லை.சாலமோன் எருசலேமுக்கு எதிரில் இருந்த மலையில் மோவாபியரின் அருவருப்பான கெமோசுக்கும் அம்மோனியரின் அருவருப்பான மோலேக்குக்கும் தொழுகைமேடுகளைக் கட்டினார்.இப்படியே தங்கள் தெய்வங்களுக்குத் தூபம் காட்டிப் பலியிடுவதற்காக, வேற்றினத்தாரான தம் மனைவியர் எல்லோருக்கும் சாலமோன் இவ்வாறு செய்து கொடுத்தார்.ஆண்டவர் சாலமோன்மீது சினமுற்றார். ஏனெனில் தமக்கு இருமுறை காட்சியளித்திருந்த இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரிடமிருந்து அவர் இதயம் விலகிச் சென்றது.வேற்றுத் தெய்வங்களைப் பின்பற்ற வேண்டாம் என்று ஆண்டவர் அவருக்குக் கட்டளையிட்டிருந்தும், அக்கட்டளையை அவர் கடைப்பிடிக்கவில்லை. ஆகையால் ஆண்டவர் சாலமோனை நோக்கி, ”நான் உன்னோடு செய்த உடன்படிக்கையையும், நான் உனக்கு விதித்த நியமங்களையும் மீறி, நீ இவ்வாறு நடந்துகொண்டதால் உன் அரசை உன்னிடமிருந்து பறித்து அதை உன் பணியாளனுக்குக் கொடுக்கப்போவது உறுதி. ஆயினும் உன் தந்தை தாவீதின் பொருட்டு, உன் காலத்தில் நான் இதைச் செய்யமாட்டேன். உன் மகன் கையினின்று அதைப் பறித்து விடுவேன்.ஆயினும் அரசு முழுவதையும் பறித்துவிடாமல், என் அடியான் தாவீதின் பொருட்டும் நான் தேர்ந்து கொண்ட எருசலேமின் பொருட்டும் ஒரு குலத்தை உன் மகனிடம் விட்டுவைப்பேன்” என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் மக்கள் மீது இரக்கம் காட்டிஎன்னை நினைவுகூரும்.

### நற்செய்தி : மாற்கு 7 : 24 - 30

அக்காலத்தில் இயேசு புறப்பட்டுத் தீர் பகுதிக்குள் சென்றார். அங்கே அவர் ஒரு வீட்டிற்குள் போனார் தாம் அங்கிருப்பது எவருக்கும் தெரியாதிருக்க வேண்டுமென்று விரும்பியும் அதை மறைக்க இயலவில்லை.உடனே பெண் ஒருவர் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டு உள்ளே வந்து, அவர் காலில் விழுந்தார். அவருடைய மகளைத் தீய ஆவி பிடித்திருந்தது.அவர் ஒரு கிரேக்கப்பெண் சிரிய பெனிசிய இனத்தைச் சேர்ந்தவர். அவர் தம் மகளிடமிருந்து பேயை ஓட்டிவிடுமாறு அவரை வேண்டினார்.இயேசு அவரைப் பார்த்து, ”முதலில் பிள்ளைகள் வயிறார உண்ணட்டும். பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல” என்றார்.அதற்கு அப்பெண், ”ஆம் ஐயா, ஆனாலும் மேசையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் சிறு பிள்ளைகள் சிந்தும் சிறு துண்டுகளைத் தின்னுமே” என்று பதிலளித்தார்.அப்பொழுது இயேசு அவரிடம், ”நீர் இப்படிச் சொன்னதால் போகலாம் பேய் உம்மகளை விட்டு நீங்கிற்று” என்றார்.அப்பெண் தம் வீடு திரும்பியதும் தம் பிள்ளை கட்டிலில் படுத்திருக்கிறதையும் பேய் ஓடிவிட்டதையும் கண்டார்.

**தியானம்:** இறைமகன் இயேசு தமது போதனையின் முழுக்காலத்திலும் வழிதவறிய ஆடுகளான இஸ்ரவேல் மக்களை இறையாட்சிக்குள் அழைக்கவே வந்தேன் என்று திருவாய் மலர்ந்தார். ஆயினும், இன்றைய நற்செய்தியில் “ஆம் ஐயா, ஆனாலும் மேசையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் சிறு பிள்ளைகள் சிந்தும் சிறுதுண்டுகளைத் திண்ணுமே”(மாற்கு7:28) என்று சொன்ன கிரேக்கப் பெண்ணின் வார்த்தைகளில் இருந்த விசுவாச மேம்பாட்டைக்கண்டு யூதமதச்சட்டங்கள், சம்பிரதாயங்களைத் தகர்த்தெறிந்து தமது இறை இரக்கத்தை வெளிப்படையாகப் பகிர்ந்து நிற்கின்றார். ஆதலால், எமது பாவ வாழ்வு மனிதர்கள் முன் எம்மைத் தகுதி அற்றவர்கள் எனக் கூறலாம். ஆனாலும், நாம் எமது மீட்பர் ஆண்டவர் இயேசுவிடம் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டு, இரந்து மன்றாடும் போது எமது பாவநிலைகள் காரணமாக இறையாட்சிக்குள் நுழைவதற்கு நாங்கள் தகுதி எதுவுமற்ற அடிமைகளல்ல என்பது நிரூபிக்கப்படுகின்றது. ஆதலால் இரக்கப்பெருக்கம் நிறைந்த இறைமகன் எங்களை இறையாட்சியின் உரிமைக் குடிமக்களாக மாற்றுவார் என்பது தெளிவாக்கப்படுகின்றது. “ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடப்போர் பேறுபெற்றோர்” என இறைவன் எமக்கு வாக்குறுதி அளித்திருக்கின்றார். தனது அன்புக் கட்டளைக்கு மனிதன் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்றே ஆதியில் ஆணும் பெண்ணுமாக மனிதனைப் படைத்து அவர்கள் ஒன்றித்து வாழுவதற்கு அனுமதித்தார் எனவும் தொடக்க நூலில் நாம் வாசிக்கின்றோம். அன்று கிரேக்கப் பெண்ணின் விண்ணப்பத்திற்கு செவிசாய்த்தவர், எமது அழுகுரலுக்கும் செவிசாய்ப்பார் விசுவசிப்போம். எமது விண்ணப்பங்களையும் கனிவோடு நிறைவேற்றுவாரென நம்பி ஏற்றுக்கொள்வோம். பாவிகளான எமது கண்ணீரையும் இறைமகன் இயேசு கனிவோடு கண்ணோக்குவார் என்ற நம்பிக்கையோடு அவர் பாதம் சரணடைவோம். பாவிகளான நாம் மனம் திரும்பி அவரண்டை செல்லும்போது எமக்கெதிராக சத்துருவானவன் கொண்டு வரக்கூடிய எவ்விதமான “ஜெரிக்கோ” மதிலையும் ஆண்டவர் இயேசு தகர்த்தெறிவார். எல்லாமே இலேசான காரியம். அவராலே ஆகாதது எதுவுமில்லை. எனினும், எம்மிடம் கடுகளவாவது இறை விசுவாசம் உண்டா? என எம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.